DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/ 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 11 |
| Name | : செல்லப்பாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20.07.2011ம் தேதியில் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது உசிலம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி கூடுதல் பொறுப்பாக உசிலம்பட்டி நகர் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது 20.07.2011ம் தேதி 20.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலின் பேரிலும், அதேபோல் மதுரை, அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து வந்த தகவலின் பேரிலும் உடனே உசிலம்பட்டியிலிருந்து மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்று அங்கு காயம்பட்டு சிகிச்சையிலிருந்து போஸ் என்பவரை விசாரித்தும், அவர் சொன்ன புகார் வாக்குமூலத்தை 21.30 மணியிலிருந்து 23.30 மணிவரை பதிவு செய்தும், அதன்மேல் அங்கிருந்து கிளம்பி 21.07.2011ம் தேதி 1.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.434-2011, பிரிவுகள் 294(பி), 307, 506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.5. நான் பதிவு செய்த புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து கொடுத்த சம்பவத்தின் போது அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த வெள்ளைக்கலர் அரைக்கை சட்டை மற்றும் கருப்புக்கலர் பேன்ட் ஆகியவற்றை படிவம் 91 தயார் செய்தும், வழக்கு விசாணைக்காக உசிலம்பட்டி வட்ட காவல் ஆய்வாளரிடம் முதல் தகவல் அறிக்கை மற்றும் சொத்துக்களை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ரத்தக்கறை படிந்துள்ள கோடு போட்ட வெள்ளை அரைக்கை சட்டை-1 மற்றும் ரத்தக்கறை படிந்த கருப்புக்கலர் பேன்ட்-1 ஆகும். மேற்படி சான்று பொருள்கள் ஏற்கனவே சா.பொ.ஆ.5 மற்றும் சா.பொ.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளளது. நான் தயார் செய்த படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

21.07.2011ம் தேதி உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் வைத்து இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். நேரம் ஞாபகமில்லை. உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி தான் தெரிந்து கொண்டேனா என்றால் இரண்டு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலின் படி தெரிந்து கொண்டேன். மருத்துவமனையிலிருந்து தகவல்கள் எழுத்து வடிவத்தில் கொடுப்பார்கள் என்றால் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து எழுத்து வடிவமாகவும், அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து தொலைபேசி வழியாகவும் தகவல் கொடுத்தார்கள். கொடுக்கும் தகவல்களில் காயம்பட்டவர் எப்போது, யார் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பெற்றார், சம்பவம் குறித்த விவரங்கள் இருக்குமா என்றால் இருக்கும். இவ்வழக்கு சம்மந்தமாக உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து இரவு 8.00 மணிக்கு தகவல் கிடைத்தது. அப்போது நான் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் தான் இருந்தேன். மேற்படி காவல் நிலையத்திலிருந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சுமார் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். தகவல் கிடைத்தது உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை, அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றேன். இந்த வழக்கில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி தகவலை ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து தொலைப்பேசி வழியாக உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது. அவ்வாறு தொலைப்பேசி மூலம் வரும் தகவலை பதிவு செய்ய பதிவேடு உள்ளது என்றால் சரிதான். நான்

அப்பல்லோ மருத்துவமனைக்கு செல்லும்போது மேற்படி பதிவேடை பார்க்கவில்லை. தகவல் சொன்னார்கள். ஆய்வாளர் விசாரணையின் போது தகவல் சொன்ன காவலரின் பெயரை சொல்லவில்லை. மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பவர்களிடம் எவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியும். வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும்போது காயம்பட்ட நபர் எந்த வார்டில் அனுமதிக்கப்பட்டார் என்றால் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரச சிகிச்சை பிரிவில் நோயாளி மருத்துவரின் கண்காணிப்பில் இருப்பார் என்றால் சரிதான். காயம்பட்ட நபரில் உடல்நிலை, மனநிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்கவில்லை. வாக்குமூலம் கொடுத்தவர் நல்ல மனநிலையில் இருக்கிறாரா என மருத்துவரிடம் சாட்சி கையெழுத்து பெற்றேனா என்றால் இல்லை. வாக்குமூலம் கொடுக்கும்போது, வாக்குமூலத்தை பதிவு செய்பவர் என்னால் இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என கையெழுத்து இட வேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் ஒரு மையிலும், Statement recorded by me என்ற வாசகம் மற்றொரு மையிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் இரண்டு பேனாவை வைத்து எழுதப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் புகார் எப்போது பதிவு செய்யப்பட்டது என்ற கலம் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையில் கலம் 3ல் 21.07.2011ம் தேதி 11.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.00 மணி என்பது தவறுதலாக 1.00 மணி என்பதற்கு பதிலாக குறிப்பிடப்பட்டுள்ளது. தகவல் கிடைத்த நேரம் 1.00 மணி என எழுதுவதற்கு பதிலாக தவறுதாலாக 11.00 மணி என எழுதியதை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. வழக்கின் குறைபாடுகளை மறைப்பதற்காக பின்யோசனை செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அத்தாட்சியில் தான் கைப்பற்ற வேண்டும் என்றால் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து சான்று பொருள்கள் பெறும்போது அத்தாட்சியின்றி நேரடியாக படிவம் 91ல் கைப்பற்றலாம். படிவம் 91 புத்தக வடிவில் இருக்கும் என்றால் சரிதான். அதில் 3 பிரதிகள் இருக்கும், அதை கார்பன் கொண்டு எழுதப்படும் என்றால் சரிதான். படிவம் 91 காவல் நிலையத்தில் இருக்கும் என்றால் சரிதான். காயம்பட்ட நபரிமிருந்து மருத்துவமனையில் வைத்து உடைகளை கைப்பற்றினால் அத்தாட்சியில் தான் கைப்பற்ற வேண்டும் என்றாலும், வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் படிவம் 91ல் கைப்பற்றியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. படிவம் 91ன் சான்று

பொருட்களின் வரிசை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தடய அறிவியல் பரிசோதனைக்கு அனுப்பும்போது வரிசை எண் கொடுக்கும்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.6ல் பெரும்பகுதி என்பது அடித்தம் செய்யப்பட்டும், வெள்ளை என்பது இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுவும் என்னால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். சான்று பொருள்கை கைப்பற்றியவுடன் உடனே நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அ.சா.ஆ.6ல் சாட்சி என்ற இடத்தில் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 21.07.2011ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைத்தபோது சான்று பொருளுடன் ஒப்படைக்கோரி திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு 05.08.2011ம் தேதி உசிலம்பட்டி ஆய்வாளரால் சான்று பொருள்கள் மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சான்று பொருள்களை கைப்பற்றும்போது அதை சுற்றி கவர் செய்து சீல் வைத்தேனா என்றால் இல்லை. ஆய்வாளர் விசாரணையின் போது அ.சா.1 இடமிருந்து அவருடைய உடையை கைப்பற்றிய விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். உடையை கைப்பற்றி படிவம் 91 தயார் செய்தததையும் சொல்லவில்லை என்றால் சரிதான். விசாரணையின் போது சான்று பொருள்களையும், படிவம் 91ம் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். வழக்கின் சான்று பொருள்களை ஆய்வாளரிடம் சட்டப்படி எப்படி ஒப்படைக்க வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியும். சான்று பொருள்களை ஆய்வாளரிடம் 21.07.2011ம் தேதி உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் வைத்து ஒப்படைத்தேன். அவ்வாறு ஒப்படைக்கும்போது ஆய்வாளர் வாங்கிக்கொண்டேன் என் ஒப்பம் அளித்தாரா என்றால் இல்லை. நான் ஒப்படைக்கும்போது ஒப்படைத்துவிட்டேன் என எழுதி கையெழுத்து பெற்றேனா என்றால் இல்லை. சம்பவம் சமயத்தில் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்ததற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஆய்வாளரின் வாய்மொழி உத்தரவாகும். ஆய்வாளர் தொலைபேசியில் வாய்மொழியாக உத்தரவு பிறப்பித்தார். ஆனால் எந்த தேதி என்றால் 21.07.2011 அன்று உத்தரவு பிறப்பித்தார், நேரம் ஞாபகமில்லை. ஆய்வாளர் என்னிடம் இந்த வழக்கு சம்மந்தமாக புலன் விசாரணை செய்ய சொல்லவில்லை. காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலம் ஆகியவை 21.07.2011ம் தேதி மாலை 6.40 மணியளவில் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போன்று வழக்கின் தகவல்கள் வரவில்லை என்றாலும், அதனடிப்படையில் அப்பல்லோ மருத்துவமனை சென்று அ.சா.1

இடமிருந்து எந்த வித வாக்குமூலம் பெறவில்லை என்றும், சான்று பொருள்கள் கைப்பற்றவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை, படிவம் 91 ஆகியவை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் தயார் செய்யவில்லை என்றாலும், வழக்கில் முதல் முறையாக காவல் நிலையத்திற்கு கிடைத்த தகவல்கள், புகார்கள் மறைக்கப்பட்ட உயரதிகாரிகளின் உத்தரவுப்படி பின்னிட்டு வழக்கு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால
கையொப்பம் இடப்பட்டது.

ஓம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி